<u>DEPOSITION OF WITNESS</u>

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.16**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 22-10-2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் மூலனூரில் குடியிருக்கிறேன். ஓம் ஸ்டுடியோ என்ற பெயரில் ஸ்டூடியோ நடத்தி வருகிறேன். கடந்த 23.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் ஆய்வாளர் நல்ல செல்லிபாளையத்தில் செல்லமுத்து என்பவர் தோட்டத்தில் ஒரு பிரேதம் கிடப்பதாகவும் அதை புகைப்படம் எடுக்க வேண்டும் என்றும் என கேட்டுக்கொண்டார். நான் அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு மேற்படி தோட்டத்திற்கு சென்று மேற்படி பிரேதத்தை புகைப்படம் எடுத்தேன். அதை குறுந்தகட்டில் பதிந்தும், பதிவிறக்கம் செய்தும் மூலனூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். மேற்படி பிரேதத்தை சுமார் பத்து கோணங்களில் புகைப்படம் எடுத்தேன். மேற்படி புகைப்படங்கள் குறுந்தகட்டுடன் **அ.சா.ஆ.18** (மேற்படி ஆவணம் 65 பி சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளது) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் புகைப்படம் எடுத்தபோது மேற்படி பிரேதம் நிர்வாண நிலையில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் புகைப்படம் எடுத்தபோது மேற்படி பிரேதம் ஜட்டியுடன் இருந்தது. மேற்படி ஜட்டியை தவிர வேறு உடைகள் இப்பிரேதத்தில் இருந்ததா என்றால் ஆறு வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள பிரேதம் உடை ஏதும் இல்லாமல் உள்ளது என்று சொன்னால் சரிதான் புகைப்படம் எடுக்கச் சொல்லி

என்னிடம் ஆய்வாளர் எழுத்துப்பூர்வமான வேண்டுகோள் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:58:28 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.